## நாமக்கல் மாவட்டம்

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் ரேபிட் ஆண்டிபாடி டெஸ்ட் செயல்படுத்தும் முறை குறித்த மருத்துவர்கள் மற்றும் ஆய்வக நுட்புனர்களுக்கான பயிற்சி வகுப்பு துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட 50 நபர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்கள். இவர்களில் ஏற்கனவே 6 நபர்கள் சிகிச்சை முடிவுற்று அவர்களது இல்லங்களுக்கு 108 அவசர கால ஊர்தி மூலம் சென்றனர். இன்று (20.04.2020) மேலும் 33 நபர்கள் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை முடிவுற்று தம்தம் இல்லங்களுக்கு 108 அவசர கால சேவை ஊர்தி மூலம் சென்றனர். இவர்கள் அனைவரும் தமது இல்லங்களிலேயே மேலும் 14 நாட்கள் தனிமைப்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ள 11 நபர்கள் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிய நோய்த்தொற்றின் அறிகுறிகள் தென்படுபவர்களுக்கு தொண்டை மற்றும் மூக்கு பகுதிகளின் சளி மாதிரியை எடுத்து ஆர்.டி.பி.சி.ஆர் டெஸ்ட் செய்யப்படுகின்றது.

ரேபிட் ஆண்டிபாடி டெஸ்ட் பரிசோதனையானது கடந்த 28 நாட்களில் வெளிநாடுகளுக்கு சென்று திரும்பியவர்கள், கொரோனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபர்கள், மருத்துவ, சுகாதார பணியாளர்கள் ஆகியோருக்கு நோய்த்தொற்றின் அறிகுறிகளான இருமல், சளி, காய்ச்சல் இவற்றில் ஏதேனும் இருந்தால் ரேபிட் ஆண்டிபாடி டெஸ்ட் மேற்கொள்ளப்படும்.

மேலும் கொரோனா நோய்த்தொற்று கட்டுப்பாட்டு மண்டலங்கள் மற்றும் பிற பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற அனுமதிக்ககூடிய சாரி எனப்படும் தீவிரமான நெஞ்சு சளி, காய்ச்சல் கண்ட நபர்கள் மற்றும் ஐ.எல்.ஐ எனப்படும் கொரோனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு நோய்த்தொற்று அறிகுறிகள் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்படும். நாமக்கல் மாவட்டத்திற்கு 900 எண்ணிக்கையிலான ரேபிட் ஆண்டிபாடி டெஸ்ட் பரிசோதனை கருவிகள் வந்துள்ளன.

ரேபிட் ஆண்டிபாடி டெஸ்ட் என்பது நோய்த்தொற்றின் தாக்கம் மற்றும் நிலை குறித்து தெரிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் சோதனையாகும். கொரோனா நோய்த்தொற்றினை உறுதி செய்யவதற்கான சோதனை ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை மட்டுமே ஆகும்.

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் ரேபிட் ஆண்டிபாடி டெஸ்ட் செயல்படுத்தும் முறை குறித்த மருத்துவர்கள் மற்றும் ஆய்வக நுட்புனர்களுக்கான பயிற்சி வகுப்பு துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் இன்று (20.04.2020) நடைபெற்றது. ரேபிட் ஆண்டிபாடி டெஸ்ட் பரிசோதனை மேற்கொள்வது குறித்த செயல்விளக்கம் நேரடியாக செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் பரிசோதனை முடிவுகளை அரசின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் முறைகள் குறித்து தேசிய தகவல் மைய அலுவலர் திரு.செல்வகுமார் அவர்கள் பயிற்சி அளித்தார். இந்த பயிற்சி வகுப்பில் 20 மருத்துவர்கள், 10 ஆய்வக நுட்புனர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.